www.tamilarangam.net

# சிந்தனை

கார்த்திகை 1989



சிவனொளி பாத மலையும் நடுங்கி
இந்துசமுத்திரக் குழிகளில் பதுங்க
ஒரு நாள் இங்கு மானிடம் விழிக்கும்
எல்லோர் கைகளின் விலங்கும் தகரும்

SINTHANAI 5/89 Oct. - Dec. 1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உங்களுடன் சில வார்த்தைகள்.....

வணக்கம்,

சிந்தனை தனது ஐந்தாவது ஆண்டைப் பூர்த்தி செய்து ஆறுவது ஆண்டில் காலெடுத்து வைக்கும் சமயத்தில் நாம் நன்றி சொல்ல வேண்டியவர்கள் வாசகர்களாகிய உங்களுக்குத்தான். இந்த ஐந்து ஆண்டுகளில் நாம் பலவிதமான அனுபவங்களைச் சந்தித்தோம். ஒதுக்கித்தள்ளுதல், வெறுப்புடன்கூடிய மிரட்டல்கள், தனிமனித சேறடிப்புக்கள்..... இவை எல்லாவற்றையும் வெல்வதற்கு உதவியது வாசகர்களின் உண்மையான விமர்சனங்களும் ஆதரவும்தான்.

எமக்கு ஆக்கங்கள் தந்துதவி எமது வளர்ச்சியில் பங்குகொண்ட ஆக்கதாரர்களுக்கு எமது நன்றிகள்.

நாம் எல்லாம் தெரிந்தவர்கள், எல்லாப்பிரச்சனைகளுக்கும் விடைதெரிந்தவர்கள் என்ற இறுமாப்பில் நாம் எழுதவில்லை. எமது பத்திரிகையை சுதந்திரமான பகிரங்கக் கருத்துப் பரிமாறலுக்கான களமாகவே நாம் பாவித்தோம். தங்களது சுயதேவைகள் அல்லது "அரசியல் தேவைகளுக்காக" சிந்தனையை ஒதுக்கியவர்களிடம் கூட நாம் வலிந்து சென்று எமது பத்திரிகையில் இடமளித்தோம். இதற்குக் காரணம் கருத்து வித்தியாசங்கள் நாகரிகமாகவும் ஜனநாயகரீதியிலும்

(தொடர்ச்சி பின் அட்டை)

அட்டைப்படம் : நன்றி மலையக அறிவியல் கழகம் -கண்டி,ஸ்ரீ லங்கா

www.tamilarangam.net

# பூதம் விழுந்துகிடக்கும் மலை.



உயிர்ப்பிச்சை கேட்கும் கொடியவன் போல
தளர்ந்து போனதால்,
குளிர் இவ்வேளை
நாடியைத் தடவி உச்சி முகரும்.
வெண் பூந்துகிலால் முகத்திரையிட்ட
மணமகளாக-
பனியில் அடங்காப் பகம் பேரழகை
மலைமகள் சிந்தும் வைகறைப் பொழுது.

எங்கோ பாடும் ஏதோ ஒரு பறவையும்
எங்கோ பூத்த ஏதோ ஒரு புல்பமும்
தங்களின் இருப்பின் சுதந்திரம் மகிழும்.
புகைபடிந்த ஓவியம் போன்ற
காட்சிப்புலத்தில்
சூரியக்குழந்தை சிறு கை அளாவும்.

யாழ்ப்பாணத்துக் கூரைப் பதிவினுள்
கூனிப்போன எனது ஆத்மா
முகில் பாய் விரிக்கும் ஹற்றன் மலைகளில்
நெஞ்சை நிமிர்த்தும்.

www.tamilarangam.net

குடாவைத் தாண்டியும் உலகம் விரிவதை
அலட்சியப்படுத்தி
வைத்தியம் போலப் பழம் பெருமைக்கந்தலைத்
தேகம் முழுவதும் சூடி
முள் முடிகளையும் விலங்குகளையும்
அணியெனத் தாங்கும் யாழ்ப்பாணத்தை
வலிமை பெயரும் இளைய கரத்தால்
குடாவின் வெளியே இழுத்து வாருங்கள்
ஹற்றன் மலைகளில் நிமிர விடுங்கள்.

அரைத்தூக்கத்தில் தேயிலை நிரல்களுள்
கத்திகள் வீசியும் கூடைகள் நகர்த்தியும்
விருந்து கிடக்கும் பெரும் பூதத்தை
விழிக்காதென்ற குருட்டுத் துணிவுடன்
எட்டி உதைக்கும் சின்ன மனிதருள்
விலங்குகள் சுமக்கும் நாங்களும் இருந்தோம்

சிவனொளி பாத மலையும் நடுங்கி
இந்து சமுத்திரக் குழிகளில் பதுங்க
ஒரு நாள் இங்கு மானிடம் விழிக்கும்
எல்லோர் கைகளின் விலங்கும் தகரும்
பறவைகள் போலவும் பூக்களைப் போலவும்
எல்லோர் இருப்பும் சுதந்திரம் எய்தும்.

வ.ஐ.ச.ஜெயபாலன்.

www.tamilarangam.net

# சிந்தியுங்கள்



*குயில்கள் பாட*
*திருமண ஊர்வலம் போல வந்த*
*எழுபத்தொன்றின் வசந்தகாலம்*
*ஆந்தைகள் அலற*
*மரண ஊர்வலமாகக் கழிந்தது.*[1]

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களான ரோகண விஜயவீர, உப்பதில கமநாயக்க ஆகியோரும் பெரும் தொகையான மத்தியகுழு உறுப்பினர்களும் ஶ்ரீலங்கா அரசபடைகளினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். "அவசர கால சட்டவிதிகளின் படி" அவர்களின் உடல்கள் எரியூட்டப்பட்டு அழிக்கப் பட்டதாம்.

ஒருபுறத்தில்,வெண்ணிற ஆடை அணிந்து கைகளில் மலர் செண்டுகளுடன் அகிம்சாமூர்த்தியாய் மக்கள் விடுதலை முன்னணியினரைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்துக் கொண்டு, மறுபுறத்தில் தனது கொலைப் பட்டாளங்களை அவர்களுக்கெதிராக ஏவிவிட்டிருக்கிறார் ஜனாதிபதி

---

[1]வ.ஐ.ச.ஜெயபாலனின் "வசந்தகாலம் 1971" என்ற கவிதையிலிருந்து சில வரிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரேமதாசா.

தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய விடுதலை இயக்கங்களிடம் எத்தனையோ தவறுகள் இருந்த போதிலும், அவைகள் ஸ்ரீ லங்கா அரசின் ஒடுக்குமுறைகளுக்கெதிரான தமிழ் மக்களின் எதிர்ப்பையும், ஒடுக்கப்பட்ட ஒரு தேசத்தின் விடுதலை வேட்கையினையும் பிரதிபலித்தன என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அது போல மக்கள் விடுதலை முன்னணியினரிடம் ஆயிரம் தவறுகள் இருந்த போதிலும், காலாகாலமாக சிங்கள ஆளும்வர்க்கங்களினால் ஏமாற்றப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்த சாதாரண ஏழைச்சிங்கள மக்களின் விரக்தியையும் போராட்ட உணர்வுகளையும் அந்த இயக்கம் வெளிப்படுத்தியது.

1960களிலிருந்து சுயபாசைக் கல்வி சாதாரண சிங்கள மக்களுக்குப் புகட்டப்பட்ட போதும், பணம் செலவளித்து ஆங்கிலக் கல்வியைக் கற்ற உயர்மட்டத்திலிருந்தவர்களுக்கே அரசஉத்தியோகம், வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் முன்னேற முடிந்தது. தனிச்சிங்களச்சட்டமும், தரப்படுத்தல் சலுகைகளும் கிராமிய சிங்கள இளைஞர்களுக்கு வாழவழி காட்டவில்லை. இந்த விரக்தியுற்ற இளைஞர்களை அணிதிரட்ட பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் தவறிய போது, மக்கள் விடுதலை முன்னணி அவர்களது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கமாக உருவாகியது.
1971இல்"கிராமங்களில் ஏற்படும் ஆயுதஎழுச்சிகளினூல் நகரங்களைச் சூழ்ந்து..." எனத் தாம் தேரந்தெடுத்துக் கொண்ட பாதையில்போராட்டங்களை ஆரம்பித்த போது, நகரத்தில் ஸ்திரமாக இருந்த அரசு பத்தாயிரத்திற்கும் மேலான இளைஞர்களைக் கொன்று அந்த எழுச்சியை அடக்கியது.
.....அரச ஒடுக்குமுறைகள் மக்களின் விரக்திகளுக்குப் பரிகாரமாவதில்லை...விரக்தியுற்ற சிங்கள இளைஞர்கள் மீண்டும் மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் அணிதிரளராயினர்...மீண்டும் ராணுவ ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன...
இன்று சர்வதேசிய நிதிநிறுவனங்களின் கடன்களில் முற்ருகத் தங்கியிருக்கும் ஸ்ரீலங்காஅரசு, அவற்றின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக, தாங்கமுடியாத சுமைகளை மக்கள் மீது சுமத்திக் கொண்டிருக்கின்றது. உலகவங்கியின் நிர்ப்பந்தத்தின் பேரில் இலங்கை ரூபாவின் மதிப்பு குறைக்கப்பட்டதினுல், பொருட்களின் விலைகள் விஷம் போல் ஏறியுள்ளன. பொது நிறுவனங்களை தனியாரின் இலாபங்களுக்காக தனியுடமையாக்கும் நடவடிக்கைகள் தொடருகின்றன. இவற்றிற்கெதிராக கிளர்ந்தெழும் மக்களின் எதிர்ப்புக்களை ஒடுக்குவதற்கு அவசரகாலச்சட்டங்களும் இராணுவமும் கட்டுப்பாடின்றி பாவிக்கப்படுகின்றன. இளைஞர்களும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர்களும் இடதுசாரிகளென சந்தேகமேற்பட்டவுடனேயே அரசபடைகளினுல் கொல்லப்பட்டு எரிக்கப் படுகிருர்கள்.

சர்வதேச நிதிநிறுவனங்களின் தேவைகளுக்கமைய மக்களின் எழுச்சிகளை ராணுவரீதியாக ஒடுக்க வேண்டிய அவசியம் ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

சர்வகட்சி மகாநாடு, சமாதான சபைகள் என வாய்ப்பந்தல் போட்டுக் கொண்டு தங்களது கொலை நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் தொடருகின்ருர்கள்.

தென் இலங்கையைப் பிணக்காடாக்கிய ஸ்ரீலங்கா அரசபடைகள் அம்பாறை ஊடாக, கைக்கூலிகளின் உதவியுடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஏற்ப்பட்டிருக்கும் ஓரளவு சகஜ நிலமைகளையும் குலைப்பதற்கு முனைகின்றன. முழு நாட்டையும் இராணுவ சர்வதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதே ஆட்சியாளரின் நோக்கமாகும்.

அரசியல் எதிரிகளை இராணுவரீதியாக ஒழிக்க முற்படும் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கெதிராக அணிதிரளும் சகல முற்போக்கு சக்திகளுக்கும் ஆதரவளிப்பது எமது கடமையாகும்.

சிந்தனையில் வெளியாகும் கையெழுத்துடன் கூடிய ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆகிகியோரின் சுதந்திரமான கருத்துக்களேயாகும்.
-ஆசிரியர்குழு.

www.tamilarangam.net

# ஓர் அநியாயமான மறைவு

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் விரிவுரையாளராகவிருந்த திருமதி ராஜனி திரணகம,21.9.89 அன்று யாழ்ப்பாணத் தெருவொன்றில் வைத்துத் துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மனிதநாகரிகம்,மனிதநேயம் என்பவை உதட்டளவிலும்,எழுத்தளவிலும் மட்டும் வெறும்சம்பிரதாய வார்த்தைகளாகிவிட்ட இன்றைய நாட்களில் இந்தப்படுகொலையும் ஒரு செய்தியாக மாத்திரம் இடம் பெற்றுச் சென்றுவிட்டது.

எதிர்காலம் இருண்டுபோயிருக்கும் துர்ப்பாக்கியசூழலில்கூட தமது சுயநலத்தை விட்டுக்கொடுக்காத "படித்தவர்கள்"மத்தியில் தாம்கற்றகல்வியையும்,சிந்திக்கும் ஆற்றலையும் தேசமக்களுடன் பகிர்ந்து கொண்டு பணியாற்றும் புத்திஜீவிகள் மிகச்சிலரை தொடர்ச்சியாக கொன்றொழித்து வரும் இதயமற்ற அராஜகத்தினால் ராஜனி திரணகம தனது உயிரை இழந்தார்.

மனச்சாட்சியை உறுத்தும் இதைப்போன்ற பல சம்பவங்கள் நிகழ்ந்துவிட்ட போதுங்கூட அவற்றை இன்னமும் மௌனமாக அங்கிகரிக்கும் எமது மண்ணில் ராஜனியின் இரத்தமும் சிந்தப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலையைச் செய்த கொலைகாரர்கள் மாத்திரமல்ல,ஏதாவது காரணங்களைக்கூறிக்கொண்டு மௌனம் சாதிப்பதன் மூலம் மறைமுகமாக ஆயுத அராஜகத்தை தொடரவிடும் அனைவருமே இவ்விளந்தாயின் கொலைக்குப் பொறுப்பாளிகள் தான்.

படுகொலைகளைக் கண்டனங்களால் மட்டும் நிறுத்தமுடியாது. அராஜகத்தின் ஆணிவேரை அகற்றாமல் அநியாயங்களைத் தடுக்கவும் முடியாது.

மனித நேயத்தை இழந்து கொண்டிருக்கும் எமது தேசத்தில் வாழ விடாமல் வீழ்த்தப்பட்ட ராஜனிக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.(ஆகு)

## இன்று நீ இல்லை

இலையுதிர் காலத்து மரங்களும்
வெற்றுக் கொம்பரில் கிழிபடும் காற்றும்
ஓலமிடுகின்ற தெருக்களில்
ராஜனி திரணகம
நான் உனை நினைந்து நினைந்து அழுதேன்.
எவ்வளவு இனிமை
நம் எல்லோரதும் இளமை வாழ்வு.
அப்போ நமது பனை மரங்களும் நிமிர்ந்து நின்றனவே.

www.tamilarangam.net

பின்னர் நாங்கள் சிதறப்பட்டோம்.
கூடுகள் குலைதலும்
மேலும் மேலும் சிதறப்படுதலும்
இலங்கைத் தமிழரின் தலைவிதியல்லவா
நான் பரதேசிக்குயிலாய் பாடித்திரிந்தேன்.
நமது நண்பனே
பேசப்படித்தவோர் சித்தனாய் அலைந்தான்.
நீ வைத்தியரானது
க்டெதல்கோப்பைக் கிரீடமாய்ச் சூடி
சிம்மாசனங்களில் அமர்ந்திட வென்றால்
எமைவிடச் சிறப்பாய்
இன்று நீ எங்கெனும் இருந்திருப்பாயே
இன்று நீ இல்லை
தேன் சிந்தும் வயதில்
உனது தொப்பூள்க் கொடியின் சிறு மலர்
கண்ணீர் சிந்திச் சிந்திக் கரையுதே
ஊரோடும் போது ஒத்தோடாமல்
தாய் மண் காக்க உன்னுடன் தரித்த
வைத்தியச் சான்றோர் மனமிடிந்தனரே....
நுனிமரமிருந்து அடிமரம் தறிக்குமோர்
பயங்கரவாதியின் ஈயக்குண்டு
வாழும் ஆசையும்
கனவும் மனித நேசமும் நிறைந்தவுன்
சின்ன இதயத்தை துளைத்துச் சென்றதாய்
தொலைபேசியில் என் நண்பன் அழுதான்.
இன்று நீ இல்லை
என்தாய் மண்ணில் பனைகளும் முறிந்தன.
ஐரோப்பாவில்
இலையுதிர் காலத்துத் தெருக்களில் புரளும்
சருகொடு சருகாய் இன்னும் நாங்கள்.

வ.ஐ.ச.ஜெயபாலன்.

(கவிதை- நன்றி புதுமை)

www.tamilarangam.net

# அவர்கள்

வந்த சூருவளியால்
நின்ற பயிர்கள்
அடியோடு அழிந்தன
பசுமை நந்தவனம்
பாலைவனம் ஆவது கண்டு
விரைந்தன மந்தைகள்
கூட்டத்தை விட்டே

எஞ்சிய ஆடுகள்
மழைக்குப் பயந்து
தஞ்சம் புகுந்தன
கசாப்புக்கடையில்
வந்த பாதை மறந்தன
ஊட்டி வளர்த்த
தம்பி மேய்ப்பவனையே
மெல்லத் துணிந்து விட்டான்
இனி ஒரு விதி செய்ய
இவர்களால் முடியாது.

V. கண்ணன்.

# மண்டை ஓடுகள் சண்டை செய்ய...

மண்டை ஓடுகள் சண்டை செய்ய
மரணிப்பமோ!
குண்டர் தடியர்கள் கொலைகளுக்கே
குறியாவமோ!
தண்டல்காரரின் தண்ணீர் பந்தலில்
தாகம் தீர்ப்பமோ!
நேற்றும் இன்றும் நிகழ்ந்தவைகளே
இறந்ததாகலாம்.
நாளையென்பது நமது கைகளில்
பிறந்தேயாகணும்.
ஆளைக் கொல்லும் அராஜகம்
என்றும் அழியவே
வேளைவந்தது தோள்கள் சேர்ந்திட
தோழரே.

– படை

www.tamilarangam.net

# இந்தியத்தேர்தல் முடிவுகள்

—எல்.எஸ்.ராசன்

உலகின் மிகப்பெரிய ஜனநாயகநாட்டின் பாராளுமன்றத்தேர்தல் நவம்பர் 22,24,26 ஆகிய திகதிகளில் இந்தியாவில் நடந்து முடிந்துள்ளது. இதில் காங்கிரஸ், அ.தி.மு.க,ஜனதாதளம்,தெலுங்குதேசம்,தி.மு.க,காங்கிரஸ்(எஸ்),பாரதிய ஜனதா,இந்திய கம்யூனிஸ்ட்,இந்திய கம்யூனிஸ்ட்(மா), ஆர்.எஸ்.பி,மற்றும் சுயேட்சைகள் அடங்கிய வேட்பாளர்களாக மொத்தம் 6090 பேர் போட்டியிட்டனர். இத்தனை வேட்பாளர்களும் அசாம் மாநிலம் தவிர்த்த 31 மாநிலங்களிலும்(7யூனியன் பிரதேசம் உட்பட) போட்டியிட்டனர். இம்முறை 18 வயதிற்கு மேற்பட்டோருக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டதால், இந்தியாவின் 81 கோடியே 10 இலட்சம் மக்கள் தொகையில் 49 கோடியே 86

இலட்சத்தினர்

வாக்குரிமையைபெற்றுள்ளனர். இவர்கள் 542 லோக்சபை ஸ்தானங்களுக்கு வேட்பாளர்களை தெரிவு செய்யவேண்டும். இதில் அசாம் மாநிலத்தில் வாக்காளர் பதிவு பூர்த்திசெய்யப்படாததால் 14 ஸ்தானங்களும்,4வேட்பாளர்கள் காலமாகியதால் மேற்படி ஸ்தானங்களுக்கான தேர்தல் நடைபெறவில்லை .எனவே சென்ற தேர்தலில் 542 ஸ்தானங்களுக்கான தேர்தலே நடைபெற்றது. இலங்கையைப் போல் ஏறக்குறைய 52 மடங்கு பரப்பளவு கொண்ட இந்தியதேர்தலானது உலகநாடுகளின் ஓர் முக்கிய நிகழ்ச்சியாக அவதானிக்கப்பட்டது. இத்தேர்தலில்,மாநிலங்களின் ஆளுமை கொண்ட பெரும்பான்மையான மாநிலக்கட்சிகள்,இந்திரா காங்கிரசில் இருந்து 3 வருடத்திற்கு முன்னர் வெளியேறி வி.பி. சிங்குடன் இணைந்து தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி இந்திரா காங்கிரசுக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்தி இந்திரா காங்கிரசை தோற்கடித்தனர். தேசிய முன்னணியினர் இந்திரா காங்கிரசை சில வித்தியாசத்தால் தோற்கடித்தாலும் ஆட்சி அமைக்க

www.tamilarangam.net

கூடிய பெரும்பான்மை இருக்கவில்லை. எனவே வலது சாரிக் கட்சியான பாரதிய ஜனதாவுடனும், கம்யூனிஸ்ட் கட்சியுடனும் சேர்ந்து கூட்டரசாங்கத்தை அமைத்துள்ளனர். இதன்படி பிரதமர் பதவியானது நீண்ட சச்சரவுகளின் பின்னர் வி.பி.சிங்கிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய முன்னணியின் தலைவரான என்.டி. ராமராவ் தான் போட்டியிட்ட இரண்டு தொகுதியில் ஒரு தொகுதியில் தோல்வியுற்றதுடன் ஆந்திரா மாநில சட்டசபைத் தேர்தலில் அவருடைய கட்சி இந்திரா காங்கிரசிடம் தோல்வியுற்றதால் ஆந்திரா மாநில முதல்வர் பதவியையும் துறந்தார்.

இவ் லோக்சபைத் தேர்தலுடன் கர்நாடக, ஆந்திர சட்டசபைத் தேர்தல்களும் நடைபெற்றன. இவை இரண்டிலும் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றியை பெற்றுள்ளது. இத் தேர்தலை மொத்தமாக கணிக்குமிடத்து தி.மு.க அதன் வரலாற்றில் படுதோல்வியை அடைந்துள்ளது.

இத் தேர்தலில் ஆலடி அருணா, கோபாலசாமி, பூட்டாசிங், முன்நாள் வெளியுறவு செயலர் ஏ.பி.வெங்கடேசன் ஆகியோர் தோல்வியடைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இத் தேர்தல் பற்றிய பூரணமான ஆய்வினை அடுத்த கட்டுரையில் செய்வோம்.

சுதந்திரமான கருத்துப்பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

ஆக்கங்கள், விமர்சனங்கள், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**SINTHANAI**
**ALBUCHWEG 8**
**7000 STUTTGART 1**
**WEST GERMANY**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுந்திரு பெண்ணே!



இலங்கையின்
சீதையே
உன் இலவசக்கனவுக்குள்ளே
இன்னும்
எத்தனை ஆண்டுகளுக்கு
இளமையைப்பூட்டி வைப்பாய்
உன்
தாலிக்கனவுகளை
விடுதலை செய்ய
உன் தாவணியை மாற்றி
சேலைசெய்து வரப்போவது யார்?
உன்தவம்
ஒரு தமிழ் ராமனுக்கு என்ருலும்
அவன் குருதி
வரதட்சனை பற்றிய
பேச்சைத்தானே
மூச்சுவிட நினைக்கிறது.
இருபதாம் நூற்ருண்டிலும்
உனக்கு
உறங்கநினைக்க எண்ணமா?

வீட்டு
விலங்குகளைக்கழற்றி
வைத்துவிட்டு
வா
உன் உற்சாகத்தேரை செலுத்து
எங்கேயோ இன்று
சம உரிமைப்போர்
ஆரம்பமாம்
அங்கு உன்
சமையல் கரங்களும்
ஜெயிக்க வேண்டும் என்பது
எனது வேண்டுகோள்!

-காங்கேசன் கோவிந்தகுமார்.

www.tamilarangam.net

சிறுகதை



# அடையாளம்

—குணம்

வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்பிய தவமணியை பேரனை இடுப்பில் வைத்துக் கொண்டிருந்த நாகம்மா வாசலில் நின்று வரவேற்ருள். குழந்தை முகுந்தனும் தன் கைகளை ஆட்டி "ம்மா..ம்மா" என்று வரவேற்ருன். கொண்டு வந்த கைப்பையையும் சாப்பாட்டுப்பெட்டியையும் தாயிடம் கொடுத்துவிட்டு குழந்தையை வாங்கிக் கொண்ட தவமணி "என்ன புதினம்?" என்று கேட்கும் பாவனையில் தாயைப்பார்த்தான். இப்படி வாசலில் நின்று வரவேற்கும் வழக்கும் நாகம்மாவிடமில்லை என்பது அவனுக்குத் தெரியும். பின்வளவில் அல்லது அடுப்படியில் பிள்ளையுடன் ஏதாவது வேலையில் ஈடுபட்டிருக்கும் தாயை "அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டு வீட்டிற்குள் வருவதுதான் அவன் வழக்கம். இன்று நாகம்மா வாசலில் நின்றதில் ஏதோ விசேடம் இருக்க வேண்டுமென்று தவமணி உணர்ந்தான். அவனின் பார்வைக்கு பதில் அளிப்பது போல நாகம்மா பேசத்தொடங்கினுள்.

"சிவகுமார் சவுதியிலையிருந்து வரப்போவதாக கடுதாசி போட்டிருக்கு......."

அவள் பேசிமுடிப்பதற்குள் தவமணி குழந்தையுடன் வீட்டிற்குள்ளே சென்றுவிட்டான். மகனின் மௌனத்தை ஓரளவு புரிந்து கொண்ட நாகம்மா வீட்டிற்குள் சென்ருள்.

முகுந்தனை மடியில் வைத்துக்கொண்டு விருந்தையிலிருந்த பழைய சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான் தவமணி. நாள் முழுவதும் தையல் இயந்திரங்களுடன் போராடிக்களைத்துவிடும் அவனின் கால்களுக்கும் கைகளுக்கும் ஓய்வுகொடுப்பது அந்தப்பாதி அறுந்துபோன சாய்வு நாற்காலிதான். வெளியே வந்த நாகம்மா நீலக்கடிதமொன்றை அவனின் மடியில் போட்டுவிட்டு முகுந்தனைத் தூக்கிக்கொண்டு அடுப்படிக்குள் சென்ருள். மடியில் விழுந்த கடிதம் வழுக்கி நிலத்தில் விழுந்தது. தவமணி கதிரையில் தலையைச்சாய்த்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்களை மூடிக் கொண்டாள்.

*                    *                    *

தவமணி கண்ணீருடன் தலைகுனிந்தபடி விலையுர்ந்த அந்த 'செற்றி'யின் விளிம்பில் உட்காரந்திருந்தாள். நாகபூசணியின் முன்பு 'செற்றி'யில் தாராளமாக உட்காருவது.... அப்படி அவளின் அம்மாவே இருப்பதில்லை..அவளுக்கும் ஏதோ பயம்....

எதிரிலிருந்த 'செற்றி'யில் நாகபூசணி தவமணியை உற்றுப்பார்த்துக் கொண்டு உட்காந்திருந்தாள். நாற்பது வயதைத் தாண்டியிருந்தாலும் செல்வத்தின் செழுமை அவளை இளமையாகவே வைத்திருந்தது.

"..தவமணி நான் சொல்லுவதைக் கேள்..நான் சொல்லுறது ஒரு புதுமையும் இல்லை...இதிலை ஒரு ஆபத்தும் இல்லை...நீயும் சின்னப்பிள்ளை..சிவகுமாரும் ஒன்றையும் யோசிக்காதவன்...இப்ப ஏதோ தெய்வாதீனமாக இது நடந்து போச்சு..இப்ப நீ அழுதோ அல்லது நாங்கள் அவனை ஏசியோ ஒன்றும் ஆகப்போவதில்லை..அவனும் நீ இதைச் சொன்ன நாளிலையிருந்து பைத்தியம் பிடிச்சவன் போலத்திரியிருன்...அவன் போட்ட 'பிளான்' எல்லாம் வீணாய்ப் போயிடுமோ என்று யோசிக்கிறான்...கையிலையிருந்த காசையெல்லாம் ஏஜன்சியிட்டை குடுத்துட்டான்..பாவம்..இப்ப வீட்டை வந்து ஒரு கிழமைக்கு மேலையாச்சு...எங்கை போனானோ தெரியாது....

இப்பஎன்ன...இரண்டு மாசம் எண்டுதானே சொல்லுறாய்...அது ஒரு ஆபத்தும் இல்லாமல் கலைச்சுப்போடலாம்..எனக்குத் தெரிந்த 'ஸ்பெஷலிஸ்ட்' எங்கடை ஆக்கள் நடத்திற 'பிரைவேட்நேர்சிங்கோமிலை' எல்லாத்தையும் ஒரு நாளிலையே செய்து முடிச்சுடுவார்...ஒருத்தருக்கும் தெரியத்தேவையில்லை..உன்றை அம்மாக்குக்கூடச் சொல்லத்தேவையில்லை..அவள் ஒரு உலகம் தெரியாதவள்..என்னவோ ஏதோ என்று பயந்து போவாள்...நீ ஒண்டுக்கும் பயப்படாதைபிள்ளை..எல்லாத்திற்கும் நான் இருக்கிறன்...

இதைச் செய்திட்டால் அவனும் மன ஆறுதலோடை வெளிநாட்டிற்குப் போகலாம்...நாளைக்கு நாலு காசு சேர்த்துக்கொண்டு வந்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுவும் நல்லதுதானே...உனக்குமென்ன நீ சின்னப்பிள்ளைதானே..நாளைக்கு என்னென்ன நடக்குதோ..." நாகபூசணி சில நாட்களாகப் பாடும் இந்தப்பாட்டையே பாடிக்கொண்டிருந்தது தவமணியின் நெஞ்சில் ஏதோ எரிவை உண்டாக்கியது. நெஞ்சு எரிகிறது என்ற வார்த்தையின் அர்த்தத்தை இப்பொழுதுதான் அவள் உணர்ந்து கொண்டாள்.

ஆரம்பத்தில் தவமணி, நாகபூசணியின் மகன் சிவகுமாருக்கும் தனக்கும் ஏற்பட்ட உறவையும் அதன் விளைவையும் நாகபூசணியிடம் முறையிட்ட போது அவள் பத்திரகாளியாக மாறினுள். "....என்னுடைய பிள்ளை அப்படியெல்லாம் நடக்கமாட்டான்....நீதான் வேலைக்கு..வேலைக்கெண்டு எங்கேயோபோய் கெட்டுப்போட்டு என்ரை பிள்ளையைச் சாட்டிருய் ....." என்று அட்டகாசம் செய்தாள். சிவகுமார் தொடர்ந்தும் வீட்டிற்கு வராமல் கொழும்பிலும் நண்பர்கள் வீட்டிலும் தங்க ஆரம்பித்ததும் தவமணி சொல்வதில் உண்மையிருக்கலாம் என உணர்ந்தாள். இப்போது எப்படியும் தன் மகனின் மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதே அவளின் நோக்கமாக இருந்தது.

"சீ நாளைக்கு நல்ல சீதனத்துடன் கலியாணம் செய்ய வேண்டியவன் இந்தக்கழுதையிடம்.." அவளின் எண்ணங்கள் வார்த்தைகளாக வெளிவரவில்லை. அவள் தவமணியிடம் நயமாகப்பேசியே தன் வழிக்குக் கொண்டுவர விரும்பினுள்.

"..நாகம்மாவை ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாமெண்டு சொல்லு...நான் எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளுறன்..."

தவமணி கண்ணீரைத்துடைத்துக்கொண்டு அந்தக்கல்வீட்டுப்படிகளில் இறங்கி வீட்டிற்குப் போனுள்.

நாகம்மாவிடம் தவமணி இந்த விசயங்களைச் சொன்ன நாளிலிருந்து அவர்களின் வீடு சாவீடு போலாகிவிட்டது. நாகம்மா புருசன் செத்த நாளிலிருந்து தவமணியினுல்தான் மனுசியாக உலாவிக்

www.tamilarangam.net

கொண்டிருந்தாள். தவமணியின் தகப்பன் அவர்கள் வசித்த குடிசையைத்தவிர வேறு எதையும் பெரிதாக விட்டுப் போகவில்லை. சேமஇலாபநிதி எப்போவோ கரைந்து விட்டது. தவமணி யாழ்ப்பாணத்தில் ஒரு தையல் கடையில் வேலை செய்துகொண்டிருந்தாள். அவளின் ஊதியத்தில் அவர்களின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் உறவுக்காரனான சிவகுமாரின் நெருங்கிய பழக்கம் அவளுக்கு ஏற்பட்டது. இரத்த உறவுகள் என்ன இருந்த போதிலும் சிவகுமாரின் குடும்பம் சமூகப்படிகளில் இவர்களின் குடும்பத்திலிருந்து பல படிகள் உயர்ந்திருந்தது. தவமணியின் குடிசைவீட்டிற்கும் சிவகுமாரின் அந்தக்கிராமத்திலேயே பெரிய கல்வீட்டிற்கும் இடையில் இருந்த சமூகஇடைவெளி கணிசமானது என்பதை தவமணி உணரவில்லை. உறவு என்ற முறையில் நாகபூசணியின் வீட்டிற்கு நாகம்மா சென்றாலும் குசினிப்பக்கத்தால் போய்வருவதுதான் வழக்கம். "வெள்ளைச்சேலையுடன் வீட்டுவாசலால் எப்படிப்போய்வருவது" என்று நாகம்மா சமாதானம் சொன்னாலும், உண்மையில் சிவப்புப்'பொலிஷ்' பண்ணின முன்விறாந்தையால் தான் செருப்பில்லாத புழுதிபடிந்த காலுடன் போவதை நாகபூசணி விரும்பமாட்டாள் என்பது அவளுக்கு தெரிந்திருந்ததே காரணம்.

நாகபூசணியின் வீட்டில் சம்பந்தம் ஏற்படவேண்டுமென்ற ஆசை நாகம்மாவிற்கு ஒரு போதும் ஏற்பட்டதில்லை. முடவனுக்கும் கொம்புத்தேனுக்குமுள்ள தூரமல்ல இது, அதைவிடப்பல மடங்கு என்பதைத்தன் வாழ்க்கையில் படித்தவள் அவள்.

கிராமச்சூழலிலும், யாழ்ப்பாண பஸ்சிலும் வளர்ந்த இந்த சிவகுமார்–தவமணியின் உறவு சமூகப்படிகளை லட்சியம் செய்யவில்லை. ஆனால் அந்த உறவு இந்த அளவுக்கு- வயிற்றில் ஒரு குழந்தையாக - வளர்ந்த பொழுது சிவகுமார் ஆடிப்போய்விட்டான். இதை எப்படிக் கழற்றுவது என்பது அவன் பிரச்சனையாக இருந்தது. அவனின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த தவமணியையும் தரைக்குக் கொண்டுவந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவமணி பயத்தினுல் தாயிடமும், நாகபூசணியிடமும் உண்மைகளைக்கக்கிய போது, அவன் எதற்கும் முகம் கொடுக்க முடியாமல் நண்பனெருவனுடன் கொழும்பிற்கு ஓடிவிட்டான்.

தவமணி தன் உறவுகளையும் உண்மைகளையும் விபரித்த போது நாகம்மா தலையில் கைவைத்து அழத்தொடங்கினுள். கூழோ, கஞ்சியோ குடித்துக் கொண்டு மரியதையாய் வாழ்ந்து கொண்டிருந்த தன் குடும்பத்தில் இடிவிழுந்தது என்று மயங்கிவிட்டாள்.
நாகபூசணி தவமணியையும் அவள் குடும்பத்தையும் தன்வாயில் வந்தபடியெல்லாம் திட்டினுள். தன் ஒன்றும் தெரியாத மகனை தாயும் மகளுமாக வசியப்படுத்தி பணக்காரக்குடும்பத்தில் மாப்பிளை பிடிக்கப் பார்க்கினம் என்று ஏசினுள்.பின்பு விசயம் முத்திவிட்டு, தன்னுடைய பிள்ளையின் மானமும் அதனுடன் தங்களின் மானமும் போய்விடுமோ என்பதை யோசித்து சாதுரியமாகப் பேசி காரியத்தைச் சமாளிக்கப்பார்த்தாள்.தனக்குள்ள தொடர்புகளைப்பாவித்து தவமணியின் வயிற்றிலுள்ள கருவைக்கலைத்து விடுவது, சிவகுமாரை எப்படியாவது வெளிநாட்டிற்கு அனுப்பிவிடுவது. பின்பு இரண்டு மூன்று வருடத்திற்குப் பிறகு அவனுக்கும் புத்திவரும், இவளையும் சமாளிக்கலாம். நாகம்மாவின் கையிலை கொஞ்சம் காசைக் கொடுத்து எங்காவது தவமணியைக் கட்டிக் கொடுக்கும்படி புத்திசொல்லலாம் என்றெல்லாம் திட்டம் தீட்டினுள்.

நாகபூசணியின் மிரட்டல்களுக்கும் போலிப்பாசத்திற்கும் பசப்பு வார்த்தைகளுக்கும் தவமணியின் கண்ணீர்தான் பதிலாக வந்தது. ஆனுல் அவளின் கண்ணீருக்கும் மௌனத்திற்கும் பின்னுல் ஏதோ ஒரு வைராக்கியம் வளர்ந்து கொண்டிருந்தது. தன் வயிற்றிலிருக்கும் கருவைக்கலைக்கச் சம்மதிக்காமல் தவமணி படியிறங்கிப் போனபோது, நாகபூசணி செய்வதறியாது ஆத்திரப்பட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்று வெள்ளிக்கிழமை. பிள்ளையார் கோவிலுக்குச் சனங்கள் போவதும் வருவதுமாக இருந்தார்கள். யாழ்ப்பாண பஸ்ஸிலிருந்து இறங்கிய தவமணி மெதுவாக வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அவளின் உதடுகளில் லேசான முறுவல் தோன்றியும் தோன்றாமலும் நெளிந்து கொண்டிருந்தது. பாதையில் செல்வோர் தன்னை உன்னிப்பாகக் கவனிப்பதை அவளால் உணரமுடிந்தது. ஆனால் அவர்களின் பார்வைகள் அவளின் ஆறுதலான நடையிலோ, முறுவல்பூத்தமுகத்திலோ எந்த விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. சாதாரணமாக கட்டைப்பாவடையுடனும் வேலைக்குக் கொண்டுபோகும் பையுடனும் களைத்து விழுந்து போகும் தவமணியை கண்டும் காணாமல் போகும் ஊர்க்காரருக்கு, அன்று தவமணி வேறு ஒரு பெண்ணாகக் காட்சியளித்தாள். அழகான சேலை,பொட்டு ஆகிய அலங்காரங்களோடு மணப்பெண் போல நடந்துகொண்டிருந்தாள். இவற்றைக்கூட அவர்கள் லட்சியம் செய்திருக்க மாட்டார்கள்.....ஆனால் சாதாரணமான ஒரு மாலையை அணிந்திருந்த அவளின் கழுத்தில் ஒரு தாலிக்கொடி மின்னிக்கொண்டிருந்தது. அவளின் இந்தக் கோலம்தான் அவர்கள் கண்களில் கேள்விக்குறிகளை எழுப்பின...எப்ப நடந்ததோ..என்றுதமக்குள் கேட்டும் கொண்டனர்.

அவளின் கோலத்தைக்கண்ட நாகம்மா திகைத்துப் போனாள்.
"எங்காலையடி இந்தத்தாலி...என்னடி நடந்தது..ஊராருக்கு நான் என்னத்தைச் சொல்ல...??? " நாகம்மா நல்லபாம்பாகச் சீறினாள்.
"சிவகுமார் எனக்கு செல்லச்சன்னதி முருகனுக்கு முன்னாலை தாலியைக் கட்டிப் போட்டு வெளிநாட்டிற்குப் போயிட்டார் என்று யார் கேட்டாலும் சொல்லு.." என்று நிதானமாகப் பதில் சொன்னாள் தவமணி. நாகம்மா எதை நம்புவது, எதை நம்பாமல் விடுவது என்று தெரியாமல் நிலத்தில் சிலையாக உட்கார்ந்து விட்டாள்..
கொழும்பிலிருந்து தாயைச் சந்திக்க வந்த சிவகுமார் இரகசியமாக வெளிநாடு செல்ல ஆயத்தம் செய்வதாக ஊரிலுள்ள சிநேகிதி மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிந்த தவமணி அவனைச் சந்திக்க எடுத்த முயற்சிகள் ஒன்றும் பலனளிக்கவில்லை. தன்னை ஏமாத்தி விட்டு ஓடுகின்ற சிவகுமாரை அம்பலப்படுத்த வேண்டுமென்ற வைராக்கியம் இப்போ செயற்பட ஆரம்பித்தது. சினேகிதியிடம் இரவல் வாங்கிய சேலையும், நகைக்கடையில் வாங்கிய 'இமிட்டேசன்'தாலிக்கொடியும் அவளை மணப்பெண்ணாக மாற்றிவிட்டன. ஊரார் வாய்கள் மிகுதியைச் செய்தன. சிவகுமார் தவமணிக்கு செல்லச்சன்னதியில் தாலிகட்டிப்போட்டு வெளிநாட்டிற்குப் போன கதை, சகுந்தலை – துஷ்யந்தன் கதை போல கிராமம் முழுவதும் பரவியது.

நாகபூசணி குமுறினாள். நாகம்மா வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. தவமணி வழக்கம் போல தாலிக் கொடியுடன் வேலைக்குப் போய் வந்தாள்.

முகுந்தன் பிறந்த போது ஊர் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை." இனி என்ன எல்லாம் ஒண்டுக்கை ஒண்டுதானே..... பொடியன் நல்ல சிவப்பாக சிவகுமாரைப் போல இருக்கிறான்.." என்று நாகபூசணியிடமே சொன்னார்கள்.

தவமணி பிள்ளையை வெளியில் கொண்டு போகும் பொழுது நாகபூசணி தூரத்திலிருந்து குழந்தையைப் பார்த்திருக்கிறாள். ஆனால் கிட்டப் போகும் மனப்பக்குவமோ அல்லது துணிவோ அவளுக்கு வரவில்லை. தவமணியும் அதை விரும்பவில்லை.

மூன்று வருடங்கள் உருண்டோடிவிட்டன. தவமணியின் ஊதியத்தில் இப்போது மூன்று உயிர்கள் வாழ்ந்து கொண்டிருந்தன. இடையில் சிவகுமார் தவமணிக்கு ஒரு கடிதம் போட்டான். அவள் நடந்துகொண்டவிதத்தைக் கண்டித்தும், அதனால் தனது தாய்க்கு ஏற்பட்டிருக்கும் இருயதநோய்க்கும் அவள்தான் காரணம் என்றும் குற்றம்சாட்டியிருந்தான். கடைசியில் முகுந்தனைப்பற்றியும் கேட்டிருந்தான். தவமணி பதில் போடவில்லை. இந்த நிகழ்வுகளின் பின்பு நாகம்மா ஒரு நிழலாகவே வீட்டிற்குள் அடைபட்டு

www.tamilarangam.net

வாழ்ந்துவந்தாள். முகுந்தனின் வரவு அந்த நிழலுக்கு சிறிது உயிர் கொடுத்தது. நகம்மாவுக்கு, தன்உழைப்பால் முன்றுஉயிர்களைக்காப்பாற்றிக் கொண்டு கர்வத்துடன் வாழும் தவமணிக்காக கண்ணீர்விடுவதா அல்லது கண்டிப்பதா என்பது தெரியவில்லை. நாகம்மாவின் உலகம் - அது பணிவான உலகம், தவமணியைப் புரிந்து கொள்ள அவளுக்கிருந்த அறிவால் முடியவில்லை.
"..என்னுடைய உழைப்பால் நாங்கள் முன்று பேரும் கஞ்சி குடிக்கு மட்டும், என்னுடைய அம்மாக்காகவோ அல்லது பிள்ளைக்காவோ நான் யாருடைய காலிலையும் விழப் போவதில்லை.." என்று தவமணி சொன்னது நாகம்மாவுக்கு ஓரளவு விளங்கியது. ஆனால் அந்தத் தாலி? அது பற்றி அவள் சொன்னது நாகம்மாவுக்கு விளங்கவில்லை.
"..இந்தச்சமுதாயத்தின் மனோநிலை முழுமையாகப் பக்குவப்படாத வரைக்கும் அதனுடன் வாழும் நான் சனங்களிடமிருந்து அன்னியப்படாமல் வாழ்வதற்கு இந்தச் செப்புத்தாலியை போடத்தான் வேண்டும்....இன்றைய நிலமையில் அதுகளுக்கு விளங்கிற அடையாளம் இதுதான்..."

* * *

"தேத்தண்ணியைக் குடியன்..." என்ற நாகம்மாவின் குரலைக் கேட்டு தவமணி கண்களைத்திறந்தாள். முகுந்தன் நிலத்திலிருந்த நீலக்கடுதாசியைக் கிழித்துக் கொண்டிருந்தான்.

6வது இலக்கியச்சந்திப்பு- தொடர்புகொள்ள
வேண்டிய முகவரி: Tagung von Tamilen,
*Bildungswerk fur Democratie und*
*Umweltschutze e.V.*
*Zeughofstr.20,*
*1000Berlin36.*
*Tel:6126074/5*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனி
# ஒரு விதிசெய்வோம்!

ஒரு பெண் பிறந்த நாளிலிருந்தே ஒடுக்கப்படுகின்ருள். மிகவும் அபூர்வமாகவே ஒரு பெண்குழந்தை குடும்பத்திற்குள் வரவேற்கப்படுகின்ருள். பெண்குழந்தையைப் பெற்ற தாய் அதிர்ஷ்டமற்றவளாகவே கணிக்கப்படுகிருள். அதிகமான பெண்குழந்தைகளைப்பெற்றதாயாகவோ அல்லது ஒரு ஆண்குழந்தையையும் பெருத தாயாகவோ இருந்துவிட்டால் அவள் துர்ப்பாக்கியவதியாகவே கருதப்படுகிருள். அதிர்ஷ்டமற்றவள் எனக்கூறப்படும் இந்தப்பெண் பிறந்ததிலிருந்து பல்வேறுவழிகளால் ஒடுக்கப்படுகின்ருள். அவள் வளரும்போது அவளது சமவுரிமைகளான சொந்தவிருப்புவெறுப்புகள், கல்வி, சுயமாக முடிவெடுத்தல் என்பவை மறுக்கப்படுவதுடன் சிலசமயங்களில் உணவு, உடை என்பவற்றில் கூட பாரபட்சம் காட்டப்படுகின்றது. அவள் ஒரு அறிவற்றவளாகவும், உபத்திரவமாகவும், சுமையாகவும், மற்றவர்களில்

## மௌனத்தின் மொழிபெயர்ப்புகள்



தங்கியிருக்கவேண்டியவளுமாகவுமே கருதப்படுகிருள். அவளை ஒரு மனிதப்பிறவியாகவோ, அல்லது சாதாரணபிரஜையாகவோ பாவிக்கலாம் என்று ஒருவருமே சிந்திப்பதில்லை.

பொதுவாக ஒரு பெண் வயதிற்கு வந்த நாளிலிருந்தே அவள் தனது சுதந்திரத்தை சிறிது சிறிதாக இழக்க வேண்டியுள்ளது. அவளது விளையாட்டுத்தனங்கள், அணியும்முறை, கல்வி போன்றவை கட்டுப்படுத்தப்படுகின்றன. சில பெண்கள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்வது தடுக்கப்பட்டு குடும்பப்பெண்ணாக இருப்பதற்கு தயார் செய்யப்படுகிருர்கள். அவளால் எதையும் தேர்ந்தெடுக்கமுடியாது. தையல் படிப்பதற்கும், சமையல் படிப்பதற்கும், அல்லது குடும்பப்பெண்ணுக்கு அவசியமான ஏதாவதொன்றை கற்பதற்கு

( அன்பார்ந்த சகோதரிகளே; பெண்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் பகுதி இது. உங்களின் ஆக்கங்களை எழுதியனுப்புங்கள். ஆரு)

www.tamilarangam.net

கட்டாயப்படுத்தப்படுகின்றள்.ஒரு பெண் தனது பெற்றோருக்கும் ,சகோதரர்களுக்கும், சிலவேளைகளில் மாமன்மாருக்கும் பணிந்து நடக்கவேண்டியவளாகவே உள்ளாள்.அவள் சிரிக்க முடியாது,குறிப்பாக சொல்வதென்றல் அவளால்,தனது திருமணம் உட்பட தனக்கென சுயமாக எந்த முடிவையும் எடுக்கமுடிவதில்லை.அவளது சகோதரர்கள் அவள் பிறந்ததிலிருந்து சீதனத்தையும் நகைகளையும் சேர்ப்பதற்குப் பாடுபாடுகிறர்கள்.

இந்த அனைத்து சூழ்நிலைகளிலும் அவள் திருமணம் செய்தால் அவளது வாழ்வு நன்ருக அமையுமா? சந்தேகம்தான். சிலசமயங்களில் முன்னரைவிட மோசமானதாகவிருக்கும்'அல்லது நன்மையாகவும் அமையலாம். அவர்களின் எஜமான்கள் மாத்திரமே மாற்றப்படுகிறர்கள். புதிய எசமான் கணவன்தான். மற்றும் மாமன், மாமியார், கணவனின் சகோதர சகோதரிகளும் அடங்குவர். ஒரு பெண் கணவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். பொதுவாக இந்தக் கட்டளைகள் மாமியாராலேயே பிறப்பிக்கப்படுகின்றன. அவள் சுவையான உணவுப்பண்டங்களை கணவனுக்குத் தயாரிப்பது, உடைகளைத் துவைப்பது,மடித்து வைப்பது, சப்பாத்துக்களைத் துப்பரவு செய்வது போன்ற வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. இத்துடன் வீட்டைக் கவனிப்பதும், தோட்டங்களைப் பராமரிப்பதும் அவளது கடமைகளாகவுள்ளன. அவள் தனது கணவனது சகோதரிகளைக் கவனிக்கும் பொறுப்பும் அவளிடமே உள்ளது. அவள் இவ்வாறு கடமைகளை நிறைவேற்றி விட்டால் அவள் மணமான நாளிலிருந்து எல்லா அதிகாரங்களையும் வைத்திருக்கும் மாமியாரது விமர்சனத்திற்குள்ளாவாள். அவள் தனது பெற்றேர்களை அல்லது கணவனின் பெற்றேர்களை காப்பாற்றுபவளாகத்தான் இருப்பாள். சில சமயங்களில் தனது

www.tamilarangam.net

பெற்றோரைப் பார்க்கவும், உதவிசெய்யவும், கடிதங்கள் எழுதவும் அவளுக்குத் தடை விதிக்கப்படுகின்றது. பெரும்பாலும் சீதனத் திருப்தியின்மையே இதற்குக் காரணமாக அமைகிறது. சீதனமும் சமூக அந்தஸ்திற்கமையவே வித்தியாசப் படுகின்றது. எந்த விதமான சூழ்நிலைகள் அமைந்தாலும், மனித உணர்ச்சியற்ற ஜடமாகவும், மனித உரிமைகள் பறிக்கப் பட்டவளாகவும் இருக்கிறாள் என்பதே உண்மையான காரணமாகும்

பின்பு ஒன்று, இரண்டு அல்லது கூடிய குழந்தைகளுக்குத் தாயாகுவாள். அவளுக்குக் குழந்தை வேண்டுமோ அல்லது வேண்டாமோ என முடிவு எடுக்கும் உரிமை அவளுக்கில்லை. அவளுக்கு பிரசவிக்கவும் பராமரிக்கவும் மாத்திரமே உரிமையுண்டு. அவளது உடல்நிலை பற்றி யாரும் அக்கறை எடுப்பதில்லை. அவளுக்கு விதிக்கப்பட் கடமையென்ற வட்டதினுள் விழுந்து விடுகிறாள்.

குழந்தை பராமரிப்பதும் குடும்பத்தினரைப் பராமரிப்பதும் தான் அவளது நாளாந்தக் கடமைகளாகவும், இரவும் பகலும் தாய், மனைவி என்ற காரணங்களுக்காக கஷ்டப்பட வேண்டியவளாகவும் இருக்கிறாள். கணவன் தொழில்நிலயத்தில் 8 அல்லது 10 மணித்தியாலங்கள் வேலைசெய்கிறான். ஆனால் ஒரு பெண் வீட்டில், கூடிய நேரத்திற்கு ஊதியமில்லாது வேலை செய்கிறாள். சில சமயங்களில் கணவன் மதுப்பழக்கமுள்ளவனாகவோ, சூதாடுபவனாகவோ அல்லது ஸ்திரிலோலனாகவோ இருந்தால் அவள் துன்பத்துள்ளாக்கப் படுகிறாள். சுருக்கமாகக் கூறினால் ஒரு பெண்ணின் வாழ்க்கை ஒரு சிறை வாழ்க்கை போலவே இருக்கின்றது. என்ன குற்றத்திற்காக அவள் இப்படித் தண்டிக்கப் படுகிறாள்? அவள் பெண்ணாகப் பிறந்தது குற்றமா? நாம் இந்த விஷயங்களை சகோதரிகள்(பெண்கள்) மத்தியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலந்துரையாடுவோம். பெண்ணுகப் பிறப்பது பாவமோ குற்றமோ அல்ல. நாம் இவற்றிற்கு என்ன செய்வதென்று உரத்துச் சிந்திக்க வேண்டும். முதலில் மற்றைய பெண்களுடன் ஒன்ருக இணைவதன் மூலம் புரிந்துணர்வும் துணிவும் ஊட்டப்படவேண்டும்.

நாம் கீழ்பணிந்து இருப்பதை உணர்வதோடு மற்றவர்களுக்கும் உணர்த்தவேண்டும். நாம் ஒடுக்கப்படுகின்ேரும் என ஒவ்வொருவரும் உணர வேண்டும். நாம் எந்த சூழ்நிலைகளுக்காக ஒடுக்கப்படுகிரேும் என கவனத்தில் எடுத்தல்வேண்டும். முதலில் இக்கடைகளை உடைத்தெறியவேண்டும். ...டையாக அமைவது ...ம். நாம் சமையலறையின் ...வை தகர்த்தெறிந்து வெளியில்வரவேண்டும். அதன்பின்பு மற்றைய தடைகற்களான கலாச்சாரம், சம்பிரதாயம், சமயம் போன்றவற்றுக்கு எதிராக போராடவேண்டும். சிலசமயங்களில் பெண்களுக்கு மத்தியிலுள்ள பொருமை, சந்தேகம், போட்டிமனப்பான்மை போன்றவையும் தடைகளாகவே அமைகின்றன.

ஒரு பெண் சமைக்ககூடாது, கணவனையோ, குழந்தைகளையோ பராமரிக்கக்கூடாது . அல்லது அவர்களுக்கு விசுவாசமுள்ளவளாக இருக்ககூடாதென நான் கருதவில்லை. பெண் மட்டுமல்ல, விசுவாசமுள்ளவளாக இருக்கவேண்டும் என்பதுவே கருத்தாகும். கணவனும் கூட மனைவிக்கும், குழந்தைகளுக்கும், தாய்க்கும் விசுவாசமுள்ளவனுக இருக்கவேண்டும். இவ்வாறிருந்தால் சுயமாகவே வீட்டிலும், குடும்பத்திலுள்ளும் புரிந்துணர்வு ஏற்படும். அக்குடும்பத்தில் 50-50 என்ற கொள்கையிருக்கும். அதற்கு பின்பு நாம் நிதானமாக சமூகத்திற்குள் நகர்த்திலுல் அடுத்தக்கட்டமாக எல்லாப் பெண்களுக்கும் உரித்தானதும், போராடியதுமான சமஉரிமைகளை அடையமுடியும்

—மாலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

அன்புடையீர் வணக்கம்,
"சிந்தனை" பங்குனி இதழ் பார்க்கும் வாய்ப்பு இந்த அஞ்சலை எழுதும் எண்ணத்தை ஏற்படுத்தியது. தங்களின் ஆர்வமும், பணியும் போற்றுதற்குரியது.
இலங்கை மலைநாட்டில் மலையகவெளியீட்டகம் என்ற ஓர் இலக்கிய அமைப்பை ஏற்படுத்தி நூல்கள் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு இதுவரை 10 நூல்களை வெளியிட்டுள்ளோம். "கொழுந்து" என்று பெயரில் ஒரு பத்திரிகையை இருமாதத்திற்கு ஒரு முறை வெளியிட்டுவருகிறோம். உங்கள் முயற்சி மேலும் சிறக்க வாழ்த்துக்கள்.

சாரல்நாடன் பூண்டுலோயா(ஸ்ரீ லங்கா)

வணக்கங்கள்,
தோழர் ஒருவரிடம் "சிந்தனை" இதழ்களைப்பெற்று வாசித்தேன். இலங்கைத்தமிழர் பிரச்சனைகள் தொடர்பாகவும், சர்வதேச விவகாரங்கள் குறித்தும் "சிந்தனை"யில் வெளிவரும் ஆக்கங்கள் உண்மையிலேயே காலத்தின் தேவையை ஈடுசெய்யும் பாங்கில் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.
"மலையக தமிழ்மக்களின் பிரச்சனைகள், மலையகத்தில் இன்று எழுந்துள்ள நெருக்கடி நிலமைகள் தொடர்பாகவிரைவில் எனது ஆக்கங்களை "சிந்தனை"க்கு அனுப்பி வைப்பேன்.

வீ.ஏ.குறிஞ்சிபாலன் ஹட்டன்(ஸ்ரீ லங்கா)

அன்புடையீர்,
இம்மாதம் 19மதிகதி(19.7.89) 'சத்தியோதய' சென்ற போது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களின் "சிந்தனை" சஞ்சிகையைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.ஜேர்மனி போன்ற மேற்கு நாடுகளில் தமிழ் சஞ்சிகைகள் வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும். உங்களின் விலாசத்தை பிதா.போல் கெஸ்பர்ஸ் தன் கைபடவே எழுதித்தந்தார்.முழுமனித இனத்திற்காக நம்மை அர்பணிப்போமாக. இவ்வடிப்படையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வோம்.

வி.எல்.பெரைரா
பொதுச்செயலாளர்,தொழிலாளர் விவசாய விடுதலை முன்னணி,கொட்டான்சேனை,ஸ்ரீ லங்கா.

ஆசிரியர்களுக்கு,
தங்கள் "சிந்தனை" இதழ் மே`89ஐ பார்த்தேன். நல்ல அம்சங்கள் பல இருந்தன. உங்கள் துணிகரமான இலக்கியப்பணிக்கு எனது பாராட்டுக்கள். தொடர்ந்து வெளிவரும் இதழ்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். "வெகுஜனம்","தூண்டில்" ஆகிய பத்திரிகைகளையும் அனுப்பிவைக்க துணை புரிவீர்களாகில் நல்லது.

ஐ.தேவபிரபாகரன். காரைநகர்(ஸ்ரீ லங்கா)
("வெகுஜனம்","தூண்டில்" ஆசிரியர்குழுவினர் கவனிக்க!)

தங்களது "சிந்தனை" எல்லா இதழ்களையும் வாசிக்கும் வாசகன் நான்.தங்களது கட்டுரைகள் உதாரணமாக ஆனி 89 இதழில் எழுதிய ஆசிரியர் தலையங்கம், `சீனாவில் அரசியல் புரட்சியின் ஆரம்பம்' என்ற கட்டுரை ஆகியவை என்னைக் கவர்ந்தன. எனது அரசியல் கருத்துக்களும் தங்களது கருத்துக்களும் வேறுபட்டபோதும், உடனடிப்பிரச்சனைகளை ஆசிரியர்குழுவினர் அணுகும்முறை என்னையும், வாசகர்களையும் சிந்திக்கவைக்கும் திறமை

www.tamilarangam.net

கொண்டதாக வருவது வரவேற்கத்தக்கது.
இந்திரதாவ் ஹுட்விக்வ்பேக்.

தங்கள் "சிந்தனை"யுடன் வெளிவரும் "அகிலம்" பகுதியை விரும்பிப் படிக்கும் வாசகன் நான்.
'தொழிலாளர்பாதை'என்ற பத்திரிகையை வெளியிடும் கமுயுனிஸ்ட்கழகத்தினரே இக்கட்டுரைகளை எழுதுவதாக சிலர் என்னிடம் தெரிவிக்கின்றனர்.விளக்கம் தரவும்.
எஸ்.பி.ராஜா பாரீஸ்.பிரான்ஸ்.

**( 'தொழிலாளர்பாதை'ப்பத்திரிகையை வெளியிடும் கமுயுனிஸ்ட்கழகத்திற்கும் "சிந்தனை"ப் பத்திரிகைக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது."அகிலம்" பகுதியில் வெளிவரும் சகல கட்டுரைகளும் "சிந்தனை" ஆசிரியர்குழுவினரிலேயே எழுதப்படுகின்றன.- ஆகு )**

ஆசிரியர் குழுவினருக்கு, வணக்கம்,
"சிந்தனை" புரட்டாதி இதழின் ஆசிரியர்தலையங்கத்தின், வர்க்கங்களைப் பற்றிய முரண்பாடான அணுகுமுறையையும், அத்தலையங்கத்தில் எடுத்தாளப்பட்ட வசனங்களினது அர்த்தங்கள் தரும் எதிர்கருத்துக்களையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏனெனில், ஆரோக்கியமான "சமூக ஆய்வுக்கு" நாமெல்லாம் முயன்று கொண்டிருக்கின்றோம்.அந்த வகையில், "சிந்தனை"யின் வர்க்கங்களைப்பற்றிய ஆய்வின் முடிவு எமக்கு முரண்பாடாகப் படுவதால் அதைப்பற்றிய எமது அபிப்பிராயத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.
மேற்கூறியபடி முதலில் வர்க்கங்களினது முரண்பாட்டைப் பார்ப்போம்:_
"சிந்தனை", பத்தாவது பக்கத்தில் மூன்றாவது பந்தியில் இப்படி எழுதுகிறீர்கள்; "உயர்சாதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மத்தியதரவர்க்கத்தினரைபெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்சமூகத்தில்...." எங்களைப் பொறுத்தவரையில் மானிடசமூகத்தில் வர்க்கங்களைப்பற்றிப் பகுத்தாயும் பொது, வர்க்கப்போரட்டத்தை தடுக்கும் நோக்கோடு ஜாதி நாமம் சூடி பிளவு செய்து மானிடரைக் குழப்பிய ஜாதிகள் என்ற கொடிய விசத்தை நுளையவிடக் கூடாது. இவ்விதமின்றி ஜாதிகளை வர்க்கப் பகுப்புக்குள் அடக்குவோமானுல், ஒவ்வொரு ஜாதியும் ஒவ்வொரு வர்க்கமாகும். இது பிழையான அணுகுமுறையாகும். எம்மைப் பொறுத்தவரையில் "சிந்தனை"யின் இவ் அணுகுமுறை ஏமாற்றத்தைத் தருகிறது."அறிவுஜீவிகள்" பலர் முன்பு விட்ட தவறை "சிந்தனை" தொடருவதா? அதாவது இலங்கையில் அரசியல் அந்தஸ்த்தை அனுபவிக்கும் வாய்ப்பு, பொருளாதாரத்துறையில் ஏகபோகம், அசையாத் ஆதனங்களின் உரிமை, கல்வி, வேலைவாய்ப்பு முதலியவற்றை 'முடியரசு' தொடக்கம் ஒரு குறிப்பிட்ட நூறு—இருநூறு பேர்களே தமது கைக்குள் வைத்திருப்தால் தமிழ் பேசும் மக்கள் சமூகத்தை ஆய்வு செய்யும் யாவரும் உயர்சாதி என்ற மாயைக்குள் வீழ்ந்து வருகிறுர்கள். இது போன்று சிந்தனை ஆசிரியர் குழுவினரும்.....

எது எப்படியாயினும்.....

ஒரு சமூகத்தில் மத்தியதர வர்க்கம் கூடுதலாக இருப்பதாகக் கணிப்பது தவருன அணுகுமுறையாகும். ஒரு விதத்தில் உங்களது ஆய்வை நோக்கும் போது மேலோட்டமாகப் பார்த்தால் சரியானதாகப்படும். ஆனுல் வர்க்க அடிப்படையைப் பற்றி சரியாக நோக்குவோமாயின், "சிந்தனை" ஆசிரியர் குழுவினரிடம் விஞ்ஞான ரீதியாக வர்க்கங்களைப் பற்றி அறியும் மனுேபாவமில்லை என்று எண்ணத் தோன்றும். எனவே மறு பரிசீலனை செய்யுங்கள். உண்மையில் தமிழ் பேசும் சமூகத்தில் பாட்டாளிகளும்,

www.tamilarangam.net

கூலித்தொழிலாளர்களும், குத்தகை விவசாயிகளும் சேர்ந்த கீழ்தட்டு வர்க்கமே பெரும்பான்மையானது. கல்வி கற்றவர்களும், கால்சட்டைபோட்டவர்களும் மத்தியதரவர்க்கமாக மாட்டார்கள்.

அடுத்து–

"ஒடுக்கப்பட்ட ஜாதி" என்ற சொல்லை சில இடங்களிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் என்னும் சொல்லை சில இடங்களிலும் பயன் படுத்தியுள்ளீர்கள். "ஒடுக்கப்பட்ட ஜாதி" என்ற சொல்லை ஆராய்ந்தால் ஒடுக்கப்படாமல் ஜாதிகள் இருக்கலாமெனும் தொனியும் விழும். ஆதலால் நீங்கள் சில இடங்களில் கூறுவது போன்ற "ஒடுக்கப்பட்ட மக்கள்" என்று பயன்படுத்துவதே சரியானது.எனவே, ஒடுக்கப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் என்று எழுதுவதே "தனிமனித சுதந்திரத்திற்கு" பாதகமில்லாமலிருக்கும்.

மேலும்–

ஆசிரியர் தலையங்கத்தில், 4வது, பக்கத்தில் இரண்டாவது பந்தியில் எழுதப்பட்டுள்ள, "பலாத்காரமாக தென்னிலங்கையில் நிலை நிறுத்திக் கொள்ளமுயன்ற "சிங்கள தேசிய முதலாளிகளின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் சிறீலங்கா அரசாங்கம் தனது, இனவெறி அரசியலை தமிழ் மக்களுக்கெதிரான முழுமையான யுத்தமாகப் பிரகடனப்படுத்தியது.தொடர்ச்சியான இனவெறிப்பிரசாரங்களும், தமிழ்மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளையோ அல்லது சாதரணச் சிங்கள மக்களின் வறுமையையோ தீர்க்கவில்லை...."

மேல் எடுத்துக்காட்டிய வசன அமைப்பை பலமுறைகள் படித்துப்பாருங்கள். அது வேறு ஒரு அர்த்தம் தருகிறது. அதாவது "சிந்தனை" ஆசிரியர் குழுவினர் மேற்கூறிய பிரச்சாரங்களாலும், அடக்குமுறைகளாலும் நாட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதாரப் பிரச்சனை தீரவில்லையே என்று ஆதங்கப்படுவது போன்ற தொனி இதில் வருகிறது. ஏனெனில் மேற்காட்டிய வசன அமைப்பு அப்படி அமைந்து விட்டது!

"தொடர்ச்சியான இனவெறிப் பிரச்சாரங்களிலும், தமிழ்மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளிலும் ஈடுபட்ட இலங்கை அரசால் நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைகளையோ அன்றி சாதாரணச் சிங்கள மக்களின் வறுமையையோ தீர்க்க முடியவில்லை" என்று வசனம் அமையுமானால் நீங்கள் கூற வந்த விடயத்திற்குப் பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால், நீங்கள் எழுதிய விடயத்தின் அர்த்தமானது எப்படி அமைகிறது? இனவெறிப் பிரசாரங்களினாலும், ஒடுக்குமுறைகளாலும் ஒரு நாட்டினது பொருளாதாரப் பிரச்சனையை , வறுமையை தீர்க்க முடியுமென்னும்படி அமைகிறது. எனவே, சிந்தனை 'கூடியவரை, சரியான அணுகுமுறையில் எங்களை அணுகுமென்று எண்ணுகிறோம். அத்தோடு, ஆசிரியர் குழுவினர் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். ஆசிரியர் குழுவினரின் கவனக்குறைவு பத்திரிகையில் பளிச்சிடுகிறது.

ப.வி.ஸ்ரீ ரங்கன் நூறன்பேர்க்.

**(தங்களின் விமர்சனத்திற்கு மகிழ்ச்சி கலந்த நன்றி,**

**"மானுட சமூகத்தில் வர்க்கங்களைப்பற்றிப் பகுத்தாயும் பொழுது..." என்று நீங்கள் ஒரு பொதுவான ஆய்வைப் பற்றிப் பேசும் பொழுது உற்பத்தி சாதனங்களை உடமையாக வைத்திருப்பவர்களைக் காட்டிலும் உழைப்பவர்களின் தொகை அதிகம் என்பது உண்மை.**

**நமது கட்டுரை இலங்கைத்தமிழர்களின் இடதுசாரி எதிர்ப்பு அரசியல் பற்றியதாகும். பூரணமான தொழில் வளர்ச்சியேற்படாத வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் அமைப்பாகிய தொழிலான வர்க்கம் பெரும்பான்மையாக இருக்கின்றது என்ற மாயை எமக்கில்லை.**

www.tamilarangam.net

அரைநிலப்பிரபுத்துவத்திலிருந்து இன்னும் விடுபடாத சிறு வியாபாரிகள், விவசாயிகள், குத்தகை விவசாயிகள், "காற்சட்டை போட்டும், போடாமலும்" தொழில் செய்வோரிடமும் இன்னமும் ஊறியிருப்பது குட்டிமுதலாளித்துவ குணும்சங்களேயாகும்.( எமது கட்டுரையில் முஸ்லிம்மக்கள்,மலையகமக்கள் ஆகியோர் எல்லோரையும் உள்ளடக்கும் தமிழ்பேசும் மக்கள் பற்றிப் பொதுவாகவும் நாம் எழுதவில்லை.) கடந்தகாலத்தில், இலங்கைத்தமிழ் மக்களின் அரசியல் தலமைத்துவம் யாழ்ப்பாணத் தமிழர்களின் கைகளிலேயே இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதனுல் கடந்தகால அரசியல் தலமைகளை ஆய்வு செய்யும் பொழுது யாழ்ப்பாணத் தமிழ்சமூகத்தை ஆய்வு செய்வது இன்றியமையாததாகவிடுகின்றது.

இந்த நிலமைகளிலேயே "சாதிகள்" பற்றிக்குறிப்பிடாமல் யாழ்ப்பாண சமூக அமைப்பு முறையை ஆராயவேண்டுமென்ற தங்களின் கருத்தை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது.

தாங்கள் கூறுவது போல சாதிகளைக் கூறி வர்க்கப் போராட்டத்தை நாம் தடுக்க முற்படவில்லை. யாழ்ப்பாண சமூகத்தில் 50%க்கும் மேலாக உள்ள வேளாள சாதியினர், தலா 5% இருந்து 7% மாக இருக்கும் மற்றைய பல சாதியினரை சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிரித்து ஒடுக்கியதை ஒட்டுமொத்தமாக மறந்துவிட்டு "வர்க்க ஆய்வு" செய்ய வேண்டுமென்பது எமது நோக்கமல்ல. வர்க்க ஏற்ற தாழ்வுகளை ஆய்வுசெய்யும் போது ஒரே வர்க்கத்திற்குள் இருக்கும் சமூக ஏற்ற தாழ்வுகளை நாம் உதாசீனம் செய்வது தவருகும். நமது சமூகத்தில் புரையோடிய புண்ணுகவிருக்கும் சாதிமுறை என்ற 'முழுப்பூசணிக்காயை' எவரும் தமது ஆடையைக் கழற்றி மூடமுற்படக் கூடாது. வெளியேதெரிவது அவர்களில் ஒட்டியிருக்கும் சாதிவெறிதான். தங்களுக்கு அவ்வாருன நோக்கம் இல்லை என்று முழுமையாக நம்புகின்ருேம்.

4வது பக்கத்தில் தாங்கள் சுட்டிக்காட்டிய வசன அமைப்பு கட்டுரையை முழுமையாகப் பார்க்கும் பொழுது புரிந்து கொள்ள முடியுமென நாம் கருதினேம். எனினும் தங்களின் வசன அமைப்பு சிறப்பாக இருக்கின்றது. திருத்தத்திற்கு மனமார்ந்த நன்றி.

"கவனக்குறைவு" பற்றித்தாங்கள் குறிப்பிட்டதை நாம் கவனத்திற்கு எடுத்துள்ளோம். நன்றி.- ஆகு.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையகம் எங்கள் பூமி, நாம் இங்கேயே வாழ்வோம்!

அண்மையில் ஊவா மாகாணத்தோட்டங்களில் தோட்டத்தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் ரூபா 2500 வேண்டுமென தோட்ட தொழிலாள முன்னணி என்ற அமைப்பு தோட்டங்கள் தோறும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும், வேலைக்குச் சென்றுல் மரணதண்டனை என கவரொட்டி ஒட்டியிருந்தது. தொழிலாளர்கள் ஏற்கனவே பல அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியிருந்ததால் பயந்து வேலைக்குச் செல்லவில்லை. அதே நேரத்தில் சீருடையில் சென்ற பலர் வேலைக்குச் செல்லாவிட்டால் மரணதண்டனை என துண்டுப்பிரசுரம் விநியோகித்தார்கள். செய்வதறியாது திரிசங்கு நிலையில் தொழிலாளர்கள் விழித்துக்கொண்டிருந்த வேளையில் பாதுகாப்புப்படையினர் தோட்டங்களுக்குச் சென்று தொழிலாழர்களை வீடுகளைவிட்டு வெளியே தள்ளி வீடுகளுக்குச் சீல் வைத்தார்கள். இந்நிலையில் தாய்மார்கள்,வயோதிபர்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் அகதிகளாக கோயில்களில் தஞ்சமடைந்தார்கள். தொழிற்சங்கங்கள் கூட இந்நிலையில் இவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை என்பதை கவலையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது. இலங்கையின் தோட்டப்பகுதியில் ஆங்காங்கே இவ்வாறு மனித உரிமைகளை மீறும் சம்பவங்கள் தோட்டங்கள் தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அத்தோடு பாதுகாப்புப் படையினர் தோட்டக்கமிட்டி தலைவர்களையும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் படைமுகாமுக்கு அழைத்து, தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குச் செல்ல வேண்டும், அல்லது வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் என எச்சரித்தார்கள்.

இந்தச் சம்பவங்களை நோக்கும் போது மலையக மக்களுக்கு வீடும் காணியும் சொந்தமாக வேண்டுமென்பது எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை உணரக் கூடியதாகவிருக்கின்றது. எனவே தோட்டங்கள் தோறும் தொழிற்சங்க பேதங்களை மறந்து பொது அமைப்பின் கீழ் ஒன்றுபட்டு மலையகத்தில் காணிகளுக்கும் அரசியலுரிமைகளுக்குமான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும். பிரஜாஉரிமை ஏட்டளவிலாவது கிடைத்தால் போதாது.

பல அரசியல் உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்கு அரசியல்அமைப்பு ஒன்றைக்கட்டியெழுப்புவதற்கான தரணம்

www.tamilarangam.net

வந்துவிட்டது. எனவே ஒவ்வொரு மலையகத் தொழிலாளர் குடும்பமும் மாதம் ஒரு தகரம் வாங்கிச்சேமித்து வைப்பதன் மூலம் 15 மாதங்களுக்குப்பிறகு எங்களுக்கான குடியிருப்புக்களை நாமே கூட்டாகச் சேர்ந்து சிரமதான அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். அப்படி அமைத்துக் கொண்டால் நிர்வாகத்திற்கும் எமக்கும் உள்ள தொடரபு 8 மணித்தியாலத்திற்கு மட்டுமென வரையறுக்கப்பட்டுவிடும். எதிர்காலத்தில் வீடுகளிலிருந்து வெளியேதள்ளி எங்களை அகதிகளாக்கும் மனிததன்மையற்ற செயல்களைத் தடுக்கலாம். இதை எழுதுவதன் நோக்கம் தொழிற்சங்கங்களைக் குறை கூறுவதற்காகவல்ல. மேற்படி சிந்தனையை தூண்டுவதற்கு தொழிற்சங்கங்களும் புத்திஜீவிகளும் சமுகநல ஸ்தாபனங்களும் முன்வர வேண்டும். ஐக்கியப்படுவோம், போராடுவோம், அமைதிகாண்போம்.

*கோவலன் - கண்டி(ஸ்ரீ லங்கா)*

~~கவிதை - நன்றி~~

~~அறிவொளி~~

~~(யாழ்ப்பாணம்)~~



திரு. கே. ஏ. சுப்பிரமணியம்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது) இன் பொதுச் செயலாளர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். சாதாரண மக்களுடன் ஒரு சாதாரண மனிதனாக வாழ்ந்து, தனது கொள்கைக்கும், தான் சார்ந்த கட்சிக்கும், பொதுவாக சகல உழைக்கும் மக்களின் நலன்களுக்கும் உண்மையாக உழைத்த ஒரு தோழரை முற்போக்கு சக்திகள் இழந்து விட்டன.

அரசும், அராஜகமும் முற்போக்காளரை வேட்டையாடும் இவ்வேளையில் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் மறைவும், முற்போக்கு அணிகளில் ஒரு கணிசமான இடைவெளியை ஏற்படுத்துகின்றது.

மறைந்த தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்திற்கு எமது அஞ்சலிகள்.

www.tamilarangam.net

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

இதைத் தொடர்ந்து 1981ல் மாவட்ட அபிவிருத்திச்சபைக்கான தேர்தல் நடத்த தீர்மானித்தனர். இதற்கிடையில் சிங்கள தீவிரவாதிகளால் மறுபடி இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டது. சிங்களக்காடையர்கள் சிங்களப்பகுதிகளில் வசித்த தமிழரை கொன்று குவித்த இதே வேளையில் சிங்கள ஆயுதப்படையினர் தமிழ்ப்பகுதிகளில் பெரும் அட்டகாசம் புரிந்தனர். இதற்கு யூ.என்.பி பெரும் புள்ளிகளும் உடந்தையாகவிருந்தனர். யாழ்ப்பாணத்தில் பொதுநூலகம், த.வி.கூட்டணியினரின் தலைமைக்காரியாலயம், யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் திரு.யோகேஸ்வரனின் வீடு, பெரியார்களின் சிலை, பொதுநிலையங்கள் எல்லாம் உடைத்து எரிக்கப்பட்டது. திரு.யோகேஸ்வரன் அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினார். சிங்களப் பொலிசாரால் பஸ் சாரதிகள் அமிர்தலிங்கத்தின் வீடு எங்கேயென்று கேட்டு விரட்டப்பட்டனர். ஆனால் ஒரு சாரதி கூட எவ்வளவு இன்னல் தமக்கு நேர்ந்தபோதும் திரு.அமிர்தலிங்கத்தின் வீட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை.

1981ல் அறிவித்தபடி மாகாண அபிவிருத்திச்சபை தேர்தல் நடந்தது. வடக்கு கிழக்கு மாகாண மக்கள் த.வி.கூட்டணிக்கு என்றுமில்லாதவாறு ஆதரவைக் கொடுத்து மிகவும் பெரும்பான்மையாக வாக்களித்தார்கள். 1983 ஜூலை மாதம் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து மிகப்பெரிய இனக்கலவரமானது சிங்கள அமைச்சர்கள் உட்பட பல சிங்கள இனவெறியர்களால் தூண்டி விடப்பட்டது. லட்சக்கணக்கில் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். திருகோணமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ்மக்கள் தங்கள் சொந்தபூமியில் இருந்தே விரட்டியடிக்கப்பட்டனர். பல இன்னல்கள் மத்தியில் இந்தியா சென்ற திரு.அமிர்தலிங்கம் இந்திய பிரதமமந்திரி இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்து, இலங்கையில் தமிழர்களை முழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மையாக அழிக்க சிங்கள அரசு திட்டம் தீட்டியுள்ளார்கள் என்பதை விளக்கிக் கூறி உடனே இதை நிறுத்த உதவுமாறு வேண்டினார். திருமதி இந்திரா காந்தியும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கினார். இந்தியாவில் இளைஞர்களின் இயக்கங்கள் வளர வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதன்பின்புதான் இயக்கங்கள் எல்லாம் வளர்ச்சி பெற்றது என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

தலைவர் திரு.அமிர்தலிங்கம் அவர்களும் மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களும் இலங்கையில் தமிழர்கள் கஷ்டப்படும்போது இந்தியாவில் பாதுகாப்பாக இருந்தார்கள் என்ற பிரச்சாரத்தை சில தீவிர இயக்கங்கள் தங்கள் நலன்களுக்காக ஈழத்தமிழ்மக்கள் மத்தியில் செய்து வந்தார்கள். ஆனால் அந்த இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் எல்லாம் இந்தியாவிலும்,இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் வசித்து வந்தார்கள்,என்பதை நினைத்துப்பார்க்கவில்லை.இந்த நேரத்தில்தான் த.வி.கூட்டணி முக்கியஸ்தர்கள் திருவாளர்களான தர்மலிங்கம்,ஆலாலசுந்தரம்,நடராசா,வேல்முருகு,சம்பந்தமூர்த்தி போன்ற தலைவர்கள் மக்களுடன் இருந்தபோதுதானே மிகவும் கோழைத்தனமான முறையில் அவர்களின் சேவையைப் பெற்ற நம் 'தம்பி'மாரால் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தத் தலைவர்களை காக்கவேண்டிய 'தம்பி'மாரே இப்படியான துரோகத்தைச் செய்யும்போது அவர்கள் எப்படி இலங்கையில் இருக்கமுடியும்?. அன்றியும் அவர்கள் இந்தியாவில் இருந்தபோதும் இலங்கையில் இருந்து செய்யமுடியாத பல முக்கிய விடயங்களை செய்து கொண்டுதானே இருந்தார்கள். எம்தமிழ்மக்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் எதிர்கால வாழ்வுக்கும் வேண்டிய நடைமுறைச் சாத்தியமான எல்லா நடவடிக்கையையும் அவர்கள் செய்து வந்துள்ளார்கள். தலைவர் திரு.அமிர்தலிங்கம் இந்தியாவில் இருந்தபோது மூன்று விடயங்களில் கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தார்.

1. எம்மக்களின் பாதுகாப்புக்கு இந்தியாவின் உதவியை முழுமையாக பெறக்கூடிய விதத்தில் நடவடிக்கைகளை எடுத்தல்.
2. இந்தியா எங்கள் சார்பாக எடுக்கும் நடவடிக்கைகளை அமெரி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்காவிலோ அல்லது ஐரோப்பிய நாடுகளிலோ எதிர்க்காமல் இருப்பதற்கு அந்தந்த நாடுகளுக்கு ஈழத்தமிழ் மக்களின் உண்மை நிலைகளை எடுத்துக் கூறி அவர்களின் அனுதாபத்தை பெறுதல்.

4. ஈழத்தமிழ் மக்களின் அங்கங்களாகவுள்ள தீவிர இளைஞர் இயக்கங்களை ஒருமுகப்படுத்தி ஒற்றுமையாக்கல்.

இதன்படி இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் எங்கள் நிலைப்பாட்டை விளக்கி அவர்களின் ஒத்துழைப்பை பெற்றார். தமிழ்நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க, இந்திரா காங்கிரஸ் மற்றும் கட்சிகளை அடிக்கடி சந்தித்து மத்திய அரசாங்கத்தை எங்கள் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத்தூண்டும்படி வேண்டிக் கொண்டார். இந்தியாவில் உள்ள இந்து சமயஸ்தாபனங்களின் பெரியோர்களிடம் இலங்கையில் காலத்திற்கு காலம் இந்துக் கோயில்கள் சிங்கள ஆயுதப்படைகளாலும், சிங்களக்காடையர்களாலும் தீக்கிரையாக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருவதை விளக்கிக்கூறி அந்த ஸ்தாபனங்கள் மூலம் இந்திய அரசாங்கத்தை எம்மக்களின் பாதுகாப்புக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்கச்செய்தார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, நோர்வே, பிரான்ஸ், சுவிற்சலாந்து, மேற்குஜேர்மனி போன்ற நாடுகளுக்குச் சென்று அந்த நாட்டு அரசாங்க எதிர்கட்சி பொதுஸ்தாபன அமைப்புக்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்களுக்கு எங்கள் மக்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் இழைக்கப்பட்டு வந்த கொடுமைகளை மனித உரிமை மீறல் சம்பவங்களை எல்லாம் உங்களுடைய அரசாங்கங்கள் கொடுக்கிற பணத்தை பயன்படுத்தி நவீன ஆயுதங்களை இலங்கை அரசாங்கம் வாங்கி அதை தமிழ் மக்களை அழிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. நீங்கள் கொடுக்கும் பணத்தை பயன்படுத்தி இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றது என்று ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியதுடன் சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இருந்து அடித்து விரட்டினார்கள். சிங்கள பகுதிகளில் அரசாங்கத்தின் உதவியுடன் சிங்களவர் தமிழ் மக்களை கொன்று குவிக்கிறார்கள் அவர்களை விரட்டியடிக்கிறார்கள். பாராளுமன்றத்தில் புதுச்சட்டங்களைக் கொண்டு வந்து எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றம்

www.tamilarangam.net

செல்லாதபடி தடுக்கிறார்கள். இதனுடைய அர்த்தம் எங்களை பிரிந்துபோகும்படி அவர்களே தூண்டுகிறார்கள், என்கிற வாதத்தை முன்வைத்து எங்களுக்கு நாட்டை பிரித்து தரவேண்டும் என்று கேட்கவில்லை, என்றும் நீங்கள் கொடுக்கும் பணத்தால் எங்கள் மக்கள் அழிக்கப்படுவதையாவது தடுக்கும்படியும், இந்தியா எங்களுக்காக எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு தராவிட்டாலும் எதிர்க்காமலாவது இருக்கும்படி வேண்டிக் கொண்டார்.

நோர்வே, மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளின் வெளிநாட்டு அமைச்சுக்கள் இந்த விடயத்தில் நல்ல ஒத்துழைப்பை தருவதாகக் கூறியிருந்தார்கள். நோர்வே வெளிநாட்டமைச்சர் ஐ.நா.சபையில் இந்தியா இந்த விடயத்தை எடுக்குமானால் நாம் அதற்கு சார்பாக கதைப்போம் என்று கூறினர். மேற்கு ஜேர்மனி எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் கையெழுத்திட்டு இலங்கை ஜனாதிபதிக்கு தமிழ் மக்கள் மீது துன்பம் விளைவிக்கின்ற நடவடிக்கைக்கு வருத்தம் தெரிவித்து அதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

அடுத்து எமது இளைஞர்கள் பல இயக்கங்களாக பிரிந்து இருப்பதனால் மக்களுக்கு பல இடர்பாடுகள் ஏற்படுவதுடன் அவ்விளைஞர்கள் இயக்கங்கள் ஒரே கூட்டாக நடவடிக்கை எடுத்தால் அது எம்மக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்பதை கருத்தில் கொண்டு எல்லா இயக்கங்களுக்கும் கடிதங்களை அனுப்பி இதற்கு ஒத்துழைப்பை வழங்கும்படி கேட்டுக் கொண்டார். இதற்கு விடுதலைப்புலிகள் தவிர்ந்த எல்லா இயக்கங்களும் சம்மதித்து எல்லோரும் சேர்ந்து கையொப்பமிட்டு திரும்பவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை இதில் பங்கு கொள்ளும்படி கடிதம் எழுதியும் அந்த இயக்கம் இதில் பங்கு கொள்ளாமல் தாங்களும் வேறு சில இயக்கங்களும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுத்ததன் விளைவாக தலைவர் திரு.அமிர்தலிங்கம் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த அந்த ஒற்றுமை முறியடிக்கப்பட்டது.

இந்த ஒற்றுமை முறியடிக்கப்பட்டதன் விளைவே இன்று இயக்கங்கள் இன்று ஒருவரையொருவர் அழிக்கும் நடவடிக்கைகளுக்கு வழி சமைக்கப்பட்டுள்ளது. இவற்றை எண்ணி மிகவும் வேதனை அடைந்தார் திரு.அமிர்தலிங்கம் அவர்கள். இயக்கங்களுக்குள் ஒற்றுமை இல்லாவிடில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லைகளுக்கு பல இழப்புகளும் இடைஞ்சலும் ஏற்படும் என்று அடிக்கடி மனறிடம் கூறி வேதனைப்பட்டார். இது இவ்வாறிருக்க, சிங்கள அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் எல்லைப்பகுதிகளில் அமைந்த தமிழ்க் கிராமங்களில் ஆயுதம் தாங்கிய சிங்கள காடையர்களை குடியமர்த்திய நேரம் வடமாகாணத்தில் வல்வெட்டித்துறை உள்ளடங்கிய வடமராட்சிப்பகுதியை விமானத்தாக்குதல் மூலம் நிர்மூலமாக்கியது. இளைஞர் இயக்கம் தங்கள் வல்லமைக்கு மேலான இத்தாக்குதலை முறியடிக்கமுடியாமல் உலகத்தில் எல்லாப்பகுதியிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் செய்து இந்தியாவை உதவும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தலைவர் திரு.அமிர்தலிங்கம் பல அரசியல் தலைவர்களையும் கண்டு உடனே இதை தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். தமிழ்நாட்டு அரசாங்கத்தையும் இந்திரா காங்கிரஸ் தமிழ் நாட்டு பிரதிநிதிகளையும் உடனுக்குடன் சந்தித்து எடுக்கவேண்டிய நடவடிக்கையை எடுத்து இந்திய அரசாங்கத்தின் மூலம் யாழ்ப்பாணத்திற்கு உணவுவகைகளை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். இதன்பயனாக இந்தியா இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியா ஆகாய மூலம் உணவுப்பொருள்களை யாழ்ப்பாணத்தில் போட்டபோது தமிழ் மக்கள் யாவரும் சந்தோசப்பட்டார்கள். தங்களுக்கு பாதுகாப்பு கிடைக்குமென நம்பிக்கை ஏற்பட்டது. இலங்கை அரசாங்கமும் அப்போதைய ஜனாதிபதி ஜே ஆரும் இனியும் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்தால் நாடு பிரிவதை தடுக்கமுடியாது போய்விடும் என்கிற காரணத்தால் இந்திய அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கைக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் பயனாக இந்திய இராணுவம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டது. இந்திய ராணுவம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு போன போது மக்கள் மாலைகள் போட்டு வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து இந்தியா விடுதலைப்புலிகளின் இயக்கத்துடனும் பேச்சுவார்த்தைக்கமைய வடக்கு கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக அமைப்புக்குரிய தலைவர் உட்பட பெரும்பான்மையான அங்கத்தவராக ஏழு இடங்கள் விடுதலைப்புலி இயக்கத்திற்கு கொடுக்கப்பட்டது. அப்போது அதை சிலர் ஏற்கவில்லை காரணம் மற்றைய இயக்கங்களுக்கு அங்கத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதற்காக. ஆனல் தலைவர் திரு.அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் மக்களின் நன்மைக்காக மற்றைய இயக்கங்கள் உட்பட எல்லா மக்களும் அந்த அமைப்புக்கு பரிபூரண ஒத்துழைப்பு வழங்கும்படி அறிக்கை விட்டு வேண்டிக்கொண்டார்.

இதன்பின்னர் வடக்கு கிழக்கு சேர்ந்த மாகாணசபை தேர்தலுக்கு நான் குறிப்பிட்டதும் விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் தனது அறிக்கை மூலம் ஒரு வேண்டுகோளை விட்டிருந்தார். இந்த தேர்தலில் பங்கு பற்றி ஜனநாயக முறை மூலம் மக்களுக்கு வேண்டிய சேவையை செய்யவரும்படியும் அப்படி வரும் பட்சத்தில் அவர்களுக்குச் சார்பாக த.வி.கூட்டணி பிரச்சாரம் செய்வதாக, ஆனல் அதை விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கவில்லை. இவை எம்மக்களுக்கு இன்னும் கஷ்டத்தை ஏற்படுத்தாது அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்து கொடுப்பதற்காகவே தலைவர் திரு.அமிர்தலிங்கம் நடந்து கொண்டார் என்பதை காட்டுகிறது.

எம்மினத்திற்கு பெரும் அழிவை ஏற்படுத்தாமலும், எம்மினத்திற்கு அவமானத்தை ஏற்படுத்தாமலும், எம் இளைஞர்களை அநாவசியமாக இழக்காமலும் எதிரியின் பலத்தையும் எதிரிக்கு உள்ள பலத்தையும் கருத்தில் கொண்டு எடுத்த நடவடிக்கைகளை எம்மினத்தில் அக்கறையுள்ள எவரும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். இங்கே குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப்போராட்ட வரலாற்றையும், அதில் தலைவர் திரு.அமிர்தலிங்கம் அவர்களின் முக்கிய பங்கையும் குறிப்பிட்டுள்ளேன்.

தமிழ் இளைஞர்களை யாழ்ப்பாண பொலிசார் கைது செய்தவுடன் அவர்களை விடுவிக்கச் சென்றபோது இளைஞர்களுக்கு முன்னுல் சாதாரண சிங்கள பொலிசார் தாக்கினர்கள். அவரது காரில் இருந்த அவரது பாரியாரை கெட்டவார்த்தையால் திட்டினர்கள். காரை அடித்து சேதப்படுத்தினர்கள். சில இளைஞர்கள் துடித்தனர். அந்தநேரத்திலும் அந்த இளைஞர்களுக்கு கையைக்காட்டி பேசாமல் இருக்கும்படி சொன்னர். தனக்கு என்ன நேர்ந்தாலும் ஒரு தமிழ் இளைஞனையும் இழக்கக்கூடாது என்பது அவரது நோக்கம். தமிழ் இளைஞர்களை பொலிசார் துரத்திக் கொண்டு வந்த வேளையில் அவர்கள் த.வி.கூட்டணியின் காரியாலயத்திற்குள் தஞ்சம் அடைந்தவேளையில் அவர் வாசலுக்கு

www.tamilarangam.net

ஓடிச்சென்று பொலிசாரை உள்செல்ல அனுமதிக்காமல் தன்மேல் சூடு விழுந்தாலும் பரவாயில்லை இளைஞர்களுக்கு ஒன்றும் சேரக்கூடாது என்று தடுத்து நின்றார்.

பொலிசார் உதவி அதிபர் விரட்டியும் கூட அவர் எதற்கும் தயங்காது அவர்களை திரும்பி போகச் செய்தவர். கடைசியாக இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்தபோதும் அது வெற்றியளிப்பதற்கு சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் எல்லோரும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டார். அத்துடன் தமிழ்பேசும் மக்களின் அங்கமாக உள்ள எல்லா இயக்கங்களையும் சேர்ந்து பேசும்படியும் இந்தியாவும் இதில் சம்பந்தப்பட்டுள்ளபடியால் அவர்களும் இதில் பங்கு கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டிருந்தார். காரணம் முன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் சிங்கள அரசாங்கத்தால் நிறைவேற்றபடாமையை அனுபவரீதியாக தெரிந்துகொண்டமையால்தான். தந்தை செல்வாவின் அரசியல் நேர்மையும் தலைவர் பொன்னம்பலத்தின் வாதாட்ட திறமையும் மதிப்பிற்குரிய திருச்செல்வம் அவர்களின் புத்திக் கூர்மையும் ஒருங்கே அமைந்த ஒரே தலைவன் திரு. அமிர்தலிங்கம் என்று பாராட்டுமளவிற்கு அவர் உயர்ந்து நின்றார்.

தமிழ் இனத்தின் விடுதலைக்காக ஏந்திய ஆயுதம் அந்த இனத்தை அழிக்கின்றது. ஆம்வேறு அரங்கிலும் அதன் மூலம் தமிழ் மக்களை [illegible] சிந்தவும் பயங்கரமாக திருப்பப்பட்டுள்ளது. தமிழ் இனத்தின் இறைமையை நிலைநாட்டும் புனித கடமைக்காக ஏந்தப்பட்ட ஆயுதம் அந்தப்பணியை நிர்மூலமாக்க பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை எண்ணி கதிகலங்கி நிற்கிறார்கள் தமிழ் மக்கள்...

T.விஜயரத்தினம்

www.tamilarangam.net

முன் அட்டைத் தொடர்ச்சி

பகிரங்கக் கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்கப்படவேண்டும் என்ற கோட்பாட்டில் எமக்கிருக்கும் உறுதியான நம்பிக்கைதான். ஆக்கதாரர்களுக்கும் வாசகர்களுக்குமிடையில் நின்று நாம் எமது விமர்சனங்களை வைத்ததில்லை. எமது கருத்துக்களை வேருகவே எழுதிஞேம். எது சரி என தீர்மானிப்பது வாசகர்களாகிய உங்கள் கைகளில் இருந்தது.

நாம் சாதாரணமானவர்கள், அதனுல்தான் சாதாரண அடிமட்ட மக்களின் நிலைப்பாடுகளில் இருந்து யதார்த்த நிலமைகளை அணுகிஞேம். இதனுல்தான் வரலாற்றின் இக்கட்டான திருப்பங்களின் போது நாம் வாயடைத்துப் போகவில்லை.

புதிய வருடத்தில் சிந்தனையின் அமைப்பில் சில மாற்றங்கள் செய்யவுள்ளோம். பல வாசகர்களின் வரவேற்பைப் பெற்றிருக்கும் அகிலம் பகுதி சிந்தனை வெளியீடாக காலாண்டுக்கு ஒரு முறை வெளிவரும். ஆறு இதழ்களுக்கான அன்பளிப்புச் செலுத்தியவர்களுக்கு இந்த வெளியீடு இலவசமாகவே அனுப்பப்படும்.

அன்புள்ள வாசகர்களுக்கும் ஆக்கதாரர்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள். நன்றி.

- ஆகு

SINTHANAI
ALBUCHWEG . 8
7000 STUTTGART - 1
WEST GERMANY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொடுமை

பணக்கூடலின் மத்தியிலே
வறுமையின்
இனம் காண்பிக்கும் குடிசையிலே,
ஏழைமகள் ஒருத்தி
குழந்தை தனை
ஏந்திய கையினளாய்
துணைவன் வரவை எதிர்நோக்கிட
கண்கள் பூஞ்சனம் அடைந்தன...
வருவேன் என்று
கணவன் செப்பிய காலம் தவறவே...
ஏழை மனைவி ஏங்குகிறாள்...
நாயகன் வரவை எண்ணி.
குழந்தைமா வாங்கவென
அவன் கொண்டுவரும் ஊதியத்தையும்
கூடவே எதிர்பார்த்திருக்கின்றாள்...
அங்கே, அவள் கணவனுக்கு
உரிய கூலியைக் கொடுத்திட...
முதலாளிச் சீமானுக்குச் சில்லறையில்லையாம்.
நாளை வா!
இன்று மாற்றிய காசில்லை...
என்று கூறிய வார்த்தை
அவன் காதுகளில் நெருப்பை மூட்டியது...
தனிக்கும் தன்னிலைமை புரியாது
காலக்கெடு போடும்
கைகார முதலாளிக்கு...
காசமட்டும்தான் தெரியும்
கருமித்தனம் கூடப்புரியும்
குடிசையில் வாழும்
ஜீவன்களின்
ஒரு பிடிச்சோற்றுப்போராட்டம்
எங்கே தெரியும்?
ஏழைப்பெண் காத்திருந்தே
கணவனைக் காணாது
குழந்தை முகம் பார்த்து...
குமுறுகிறாள் மனத்திலே...
நாறு பேர் தூற்றாது
நாணாக வளைந்து
உழைத்துண்ண நினைத்திடும்
உத்தமர்களுக்கு, ஏழைகளுக்கு...
இப்படியும் சோதனை என்றால்
அவர்கள் இவ்வுலகில்
வாழவே முடியாதா?
வாழ வைக்க முடியாதா?
ஏனிந்தக் கொடுமை?..

விக்ஞ பாக்கியநாதன்